Poem giving mirasi of Sivan malai? 13/6-66

திருவுலவு சத்து சிவன் மலையில் வாழ் முருகனே
தெய்வானை வள்ளியுமையே திக்கு விசயங் கொண்ட
சஞ்சீவிராயனே சிறியன் விண்ணப்பமது கேள்.

சிங்கை நகர்தனில் வாழ் நற்பெருங்குடியான ச-
செயவேந்த செங்கண்ணனை சீர்கொண்ட தாரனைப்-
பதும முகவானியைத் திவ்யமிகு சாத்தந்தையை
தேவர்கள் புகழ்கின்ற வள்ளிநகர் வில்லியைச்-
செல்வனை யாந்தை குலனை செல்வ வண்ணக்கனைப்
புல்லனைக் கல்வியது. சேர்ந்து வளர் கண்ணந்தை
யை சிங்கார பூந்தையைக் காடையைக் கனக்-
கனைத் திகழ்கின்ற நீருண்ணியை சிரகத்தார்
பூண்ட செட்டியைக் காடையூர்ச் சேடனைப்
பொருள்தந்தையை அருமை திகளாடையைக்
கருணை மிகு வாணனை யரசர் புகழ் தென்காடையூர்
தனில் வளர் மணியனைக் கீர்த்தி மிகு பயிரனை
அவனிமிசை மருதுறையில் வாழ் அதிக பனங்-
காடையைப் புகழ் பெற்ற ஆந்தையை யன்பு-
மிகு செங்குன்னியை

40

அழகான முத்தூரில் வளர்கின்ற முத்தன
ஐயமிகு மணிய இவனை அகளங்க சேரனைத்
தன புதிவிளம்பனை. எனதான பொருள் தந்தையை
அமரர் புகள் கண்ணையம் பதிவளர் செங்கண்-
ணனை யதி தன வோதாள இலனை. ஆசை மிகு
மால் பதறி யோக கணவாளனை யதியுக்கிர
மா வெட்டியை அவனி புகள் செட்டியை
மூத்தன் வண்ணக்கன் யற்புதக் கருந்துளியனை
மருவலவு வெள்ளைக் கல்லதனில் வளர் இருகவனை
வாகு வது வரந்தை இலனை மகிமை மிகு கல்வியை
பிரபுலிக மாடையை மதுர மொழி யோதாளனை
மசக மென மறுமனரை யெண்ணு வண்ணக்கனை
மகராச யோக முற்ற மணி மார் பிலங்கிருந்-
தனஞ் செய இலந்தனை மன்னர் புகளாரு-
தொகுவில் மனு நீதியாயசியற்று பொருள்
தந்தையை வாவி சூழா நகரில் மருவு-
பொருடந்தையை முதளையம் பதியிலுயர்
மதியூகி செங்கண்ணின மற்று முள
பல வணிகருற்ற சம்பத்துடைய

மகராச முடி மன்னரும் மதியிரவியுள்ள-

ழவு மென்மேலும் யோகமாய்

வழம் பெறக் காக்க வென்றே.

 

திருவலவு மினிய பட்டாலியூர்க் குரு குலத்-
தர்மனைக் கண்ணே குலனே சம்பிரமிகு தீரனார்
வாழ்கின்ற ஆதிரையைச் சவுபாக்கிய அந்துவ
குலனே தனமிகுங் கீரை நற்காடையதிவிசய-
னைத் தர்ம தேவேந்திர குலனைத் தரணி-
புகழ் பாற்பதித் தோடை குல தீரனைத்-
தந்தூர மிகு கண்ணந்தையை தன்ம மிகு
கீரையைக் காடை வண்ணக்கனைத் தரு-
வாணனைச் செட்டி(டை)? தமிழோர்கள் புகழ்
பரஞ்சைப் பதிப்பயிரனைத் தாஷ்டீக செம்ப
குலனைத் தவமிகு மோதாளனைச் செட்டி
வண்ணக்கனைத் தகமை பெருமீந்த குலனே
ஜைரிய மிகு விளியனைப் பிரம குல மேருவைத்
தனத்து வழ ராவை குலனே.